மொழிப் பயிற்சி

முதற் புத்தகம்

முதுதமிழ்ப் புலவர்

மு. நல்லதம்பி அவர்கள் எழுதியது

சுன்னுகம்:

வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

மொழிப் பயிற்சி

முதற் புத்தகம்

(இரண்டாம் வகுப்பு)

முதுதமிழ்ப் புலவர்
மு. நல்லதம்பி அவர்கள்
எழுதியது

1934

சுன்னாகம் :
வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

பதிப்புரிமை] 1954 [விலை சதம் 60

நான்காம் பதிப்பு (மறுபிரசுரம்) 1954

சுன்னுகம் :
திருமகள் அழுத்தகம்

முன்னுரை

இச் சிறு நூல் இரண்டாம் வகுப்பு மாணவரின் உளப்பாங்குக் கேற்ற நெறியிலே மொழியை வளர்க்கும் பான்மையில் அமைந்துள்ளது.

மாணவர் பெரும்பாலும் தம் வீட்டிலும், தம் வீட்டைச் சுற்றியுள்ள சூழலிலும் பழகிய பொருட்கள், வினைகள் என்பவற்றிலேயே முதலிற் பயிற்சிபெறுதல் வேண்டும் என்னும் முறை, முற்றுங் கையாளப்பட்டிருக்கிறது. படங்களின் வழியே மொழிபயிலும் முறை சேர்க்கப்பட்டிருக்கிறது. அழகிய இனிய பாடல்கள் இந்நூலை அழகு செய்கின்றன.

மொழிப் பயிற்சி என்னும் பெயரோடு வரிசையாக இந் நூல் வெளிவரும் என்பதையுந் தெரிவித்துக்கொள்கிறோம். தமிழாக்கங் கருதி யுழைக்கும் ஆசிரியர்களும் ஏனைய அன்பர்களும் இவற்றை ஆதரிப்பார்களென நம்புகிறோம்.

ஆக்கியோன்

உள்ளுறை

		பக்கம்
1.	படப் பயிற்சி	1
2.	பொருளும் பெயரும்	2
3.	மனித உடம்பு	4
4.	வீடு	6
5.	வீட்டுப் பொருள்கள்	8
6.	உழவு I (பாடல்)	9
7.	பெயர் : இடப்பெயர்	11
8.	பெயர் : காலம்	12
9.	வினை : காலம்	13
10.	நிரப்பல்	14
11.	உழவு II (பாடல்)	15
12.	உணவு	17
13.	பெயரும் வினையும் I	19
14.	பெயரும் வினையும் II	20
15.	பெயரும் வினையும் III	21
16.	பெயரும் வினையும் IV	22
17.	பெயரும் வினையும் V	23
18.	பெயரும் வினையும் VI	24
19.	படப் பயிற்சி	26
20.	மேய்ப்பன் (பாடல்)	27
21.	பெயர்கள் : ஒருமை பன்மை	29
22.	வினைகள் : ஒருமை பன்மை	30
23.	ஒருமை பன்மை (பிழை திருத்தல்)	31
24.	கடமை I (பாடல்)	32
25.	ஆப்பைக் கழற்றிய குரங்கு	34
26.	திருத்தல்	35
27.	கடமைகள் II (பாடல்)	36
28.	எதிர்ச் சொற்கள்	38
29.	இரு தொடர்கள்	39
30.	தொடர்மொழி	40

மொழிப் பயிற்சி

முதற் புத்தகம்

1. படப் பயிற்சி

1. இங்கே குந்தியிருப்பவர்கள் எத்தனை பேர்?

    ....

2. அட்டணைக்கால் கட்டியிருப்பவர் எத்தனை பேர்?

    ....

3. ஏன் இவர்கள் குழல் ஊதுகிறார்கள்?

    ....

4. இந்தக் குழலுக்குப் பெயரென்ன?

    ....

5. பாம்புகள் என்ன செய்கின்றன?

    ....

6. இவைகளை இவர்கள் எங்கே பிடித்திருப்பார்கள்?

    ....

2. பொருளும் பெயரும்

கீழே சில பெயர்கள் கொடுக்கப்படுகின்றன. அவைகளை ஒன்றும் இலக்கத்திற் காட்டியபடி. (1) விலங்குகள், (2) பறவைகள், (3) தாவரங்கள் என்று வேறு வேறு எழுதுக:

மல்லிகை	மிளகாய்	ஆந்தை	கிளி
கொக்கு	எருமை	சிங்கம்	யானை
முருங்கை	குயில்	மயில்	வெளவால்
புலி	வாழை	நாய்	கத்தரி
குரங்கு	குதிரை	பூனை	வேம்பு
மா	காகம்	கமுகு	செம்போத்து

விலங்கு		பறவை		தாவரம்	
1	மாடு	1	மயில்	1	வாழை
2		2		2	
3		3		3	
4		4		4	
5		5		5	
6		6		6	
7		7		7	
8		8		8	
9		9		9	
10		10		10	

1. வாழையினால் நமக்கு என்ன பயன்?

---

2. சிங்கம் எங்கே வாழும்?

---

3. நான்கு பூக்களின் பெயர்கள் எழுதுக.

---

4. கோழியை மனிதர் ஏன் வளர்க்கிறார்கள்?

---

5. முருக்குக்கும் முருங்கைக்கும் வேறுபாடென்ன?

---

6. யானையின் கைக்கு என்ன பெயர்?

---

7. பூனைக்குஞ்சா? பூனைக்கன்று? பூனைக்குட்டியா? எது சரி?

---

8. குஞ்சு என்பது வர இரண்டு பெயர்கள், குட்டி என்பது வர இரண்டு பெயர்கள், கன்று என்பது வர இரண்டு பெயர்கள் எழுதுக:

---

3. மனித உடம்பு



தலை

கண்கள்

முகம்

பிடரி

கால்கள்

உறுப்புகள்

முண்டம்

மண்டை

கீறிட்ட இடங்களை மேலே காட்டிய சொற்களால் நிரப்புக:

1. மனித உடம்பு பல ______________ உடையது.
2. தலையில்லாத உடலை ______________ என்று சொல்வர்.

3. மனித உடம்பின் உச்சிப்பாகம் ________ எனப் படும்.
4. தலையின் முன்பாகத்துக்கு ________ என்று பெயர்.
5. தலையின் பின்பக்கம் ________ எனப்படும்.
6. உடம்பின் மேற்பாகம் ________ எனப்படும்.
7. முகத்திலே இரண்டு ________ உண்டு.
8. உடலின் கீழ்ப்பாதியே இரண்டு ________.

1. மனிதன் விலங்கினும் சிறந்தவன் என்கிறார்கள். ஏன்?

....

2. தலையிலுள்ள உறுப்புகள் எவை?

....

3. கேட்கும் உறுப்பு எது?

....

4. கேட்கும் உறுப்புப் பழுதடைந்தவனை என்னென்று கூறுகிறோம்?

....

5. ஊமையென்று யாருக்குப் பெயர்?

....

6. கையினால் என்ன பயன்?

....

7. கால்களால் என்ன பயன்?

....

4. வீடு

காற்றும்	**வீடு**	**மரம்**	**கட்டுவதற்கு**
காற்றுக்காகவும்	**கேடு**	**குப்பை**	**அடைக்கக்கூடாது**

மேலுள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் நிரப்புக :

1. நாம் குடியிருக்க ____________ உதவுகிறது.
2. வீட்டுக்குள்ளே சூரிய வெளிச்சமும் ________ நன்ருய் வரவேண்டும்.
3. ஈரம் தங்குமிடம் வீடு ____________ உதவாது.
4. வீட்டின் பக்கங்களிலே கஞ்சல் ____________ சேரவிடக் கூடாது.
5. ஈக்கள் சுகத்திற்குக் ________ உண்டாக்கும்.
6. வீட்டிற்குப் பக்கத்தில் நல்ல ____________ குளிர்ச்சிக்காகவும் ________ செடிகளை வளர்ப்பது நல்லது.
7. ஆனுல் அவை மிக நெருங்கிக் காற்றை ____________.

மொழிப் பயிற்சி

1. ஏன் எமக்கு வீடு வேண்டும்?

....

2. எந்த எந்தப் பொருள்களால் வீடு கட்டக்கூடும்?

....

....

3. வீட்டுக்குள் வெளிச்சமும் காற்றும் வர என்ன செய்ய வேண்டும்?

....

4. ஈரம் தங்குமிடம் ஏன் வீடுகட்ட உதவாது?

....

5. ஈக்களால் எப்படிக் கேடு உண்டாகும்?

....

6. முற்றம் என்று எதற்குப் பெயர்?

....

7. உங்கள் வீடு வேயப்பட்டது எப்படியென் றெழுதுக.

....

....

....

....

5. வீட்டுப் பொருள்கள்

திருத்தி எழுதுக :

1. அம்மி நெல்லுக் குத்த உதவும்.

....

2. மண்வெட்டி பாக்கு வெட்ட உதவும்.

....

3. துருவுமணை காய் அரிய உதவும்.

....

4. உரல் சமையல் செய்ய உதவும்.

....

5. சுளகு பச்சடி அரைக்க உதவும்.

....

6. அரிவாள் தேங்காய் துருவ உதவும்.

....

7. பாக்குவெட்டி நெல்லுக் கொழிக்க உதவும்.

....

8. அடுப்பு மண் கொத்த உதவும்.

....



6. உழவு I

1. காடு கரம்பை யெல்லாம் — திருத்திக்
களனிக ளாக்கிடு வோம்
நாடி யெரு விடுவோம் — விதைத்தங்கே
நன்று யுழு திடுவோம்.

2. மாமழை பெய்த லினுல் — முளைகொண்டு
மண்ணைத் துளைத்து வரும்
பூமி யழ குறவே — செழுமை
பொருந்தி வளர்ந் துயரும்.

3. பச்சைப் பயி ரம்மம்மா — வெளியெங்கும்
பார்த்திடுங் காட்சி யம்மா
மெச்சிடும் விண் ணழகும் — இதற்கிணை
மேவுத லில்லை யம்மா.

4. நெல்லுப் பயிர்க ளெல்லாம் — தண்ணீரின்மேல்
நிமிர்ந்து தோன்று தம்மா
புல்லுக் களைபறிப் போம் — இடைவெளி
போதியது கொடுப் போம்.

5. நாற்றுப் பிடுங்கிடு வோம் — தள்ளித்தள்ளி
நட்டு மகிழ்ந்திடு வோம்
நேற்று நாம் பார்த்ததிலும் — இன்றுமிக
நீண்டு தெரியு தம்மா.

— முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி

1. கழனி என்று எதற்குப் பெயர்?

....

2. ஏன் வயலுக்கு எரு இடுகிறோம்?

....

3. உழவு என்பது என்ன?

....

....

4. வயலுக்கு வேண்டிய நீர் எங்கெங்கிருந்து கிடைக்கிறது?

....

....

5. களை பறித்தல் என்பது என்ன?

....

....

6. இடைவெளி போதியது ஏன் கொடுக்க வேண்டும்?

....

....

7 நாற்று நடுவது எப்படி என்று எழுதுக:

....

....

....

7. பெயர் : இடப் பெயர்

1. நீர் இருக்கும் ஊரின் பெயரென்ன?

----

2. உமதூருக்கு வடக்கேயுள்ள ஊரின் பெயரென்ன?

----

3. உமதூருக்கு மேற்கேயுள்ள ஊரின் பெயரென்ன?

----

4. இலங்கையின் தலைநகர் எது?

----

5. நீரிருக்கும் ஊரிலுள்ள கோயிலொன்று கூறுக.

----

6. அந்தக் கோயில் உமது வீட்டுக்கு எந்தத் திக்கில் உள்ளது?

----

7. உமது பள்ளிக்கூடத்தில் எத்தனை அறைகள் உண்டு?

----

8. மூன்றாம் பிறை எந்தத் திக்கிலே காணப்படும்?

----

8. பெயர்: காலம்

(அ) வாரத்தில் நாட்கள் எத்தனை?
(ஆ) நாட்களின் பெயரை வரிசையாகச் சொல்லுக.
(இ) பன்னிரண்டு மாதங்களின் பெயரை வரிசை முறைப்படி எழுதுக.

கோடிட்ட இடங்களில் உரிய சொற்களை எழுதுக:

1. இன்று ____________ கிழமை.
   நாளை ____________ கிழமை.
   நேற்று ____________ கிழமை.
2. ____________ கிழமை எண்ணெய் தேய்த்து முழுகுவார்கள்.
3. ____________ கிழமையும் ____________ கிழமையும் பள்ளிக்கூடம் இல்லை.
4. நான் பிறந்த நாள் ____________ கிழமை.
5. விளக்கீடு ____________ மாதத்தில் வரும்.
6. நான் பிறந்த மாதம் ____________.
7. பொங்கல் ____________ மாதத்தில் வரும்.
8. போர்த் தேங்காய் ____________ மாதத்தில் அடிப்பார்கள்.
9. வருஷப்பிறப்பு ____________ மாதம் கொண்டாடுகிறோம்.
10. புத்தர் பிறந்த மாதம் ____________.

9. வினை: காலம்

1. நான் நேற்று விளையாடினேன்.
2. நான் இப்பொழுது விளையாடுகிறேன்.
3. நான் நாளை விளையாடுவேன்.

இத் தொடர்களில், நேற்று என்பது தொழில் முடிந்த காலம்; இப்பொழுது என்பது தொழில் நடக்கிற காலம்; நாளை என்பது செயல் நடக்கப் போகிற காலம். காலத்துக்கு ஏற்றபடி நாம் வினையை மாற்றிச் சொல்லுகிறோம்.

இப் பிரிவுப்படி வினைச்சொற்களை ஒன்றும் இலக்கத்திற் காட்டியபடி மாற்றி எழுதுக.

	நேற்று	இப்பொழுது	நாளை
நான்	குளித்தேன்	குளிக்கிறேன்	குளிப்பேன்
நாம்	....	....	....
நீ	....	....	....
நீங்கள்	....	....	....
அவன்	....	....	....
அவர்கள்	....	....	....

10. நிரப்பல்

omit

கீழே மூன்று பிரிவுகள் காட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரிவிலும் சில சொற்கள் எழுதப் பட்டுள்ளன. ஒவ்வொரு சொல்லுக்கும் ஒப்பான மற்ற இரண்டு காலச் சொற்களையும் குறிக்க.

	நேற்று	இப்பொழுது	நாளை
1.	படித்தான்	படிக்கிறன்	படிப்பான்
2.	....	ஓடுகிறள்	....
3.	பறந்தன	....	....
4.	....	....	கூடுவோம்
5.	குளித்தாள்	....	....
6.	....	நடக்கிறய்	....
7.	....	....	வருவாயா ?
8.	....	மேய்கிறது	....
9.	வளர்ந்தது	....	....
10.	....	பாடுகிறேன்	....

11. உழவு

(இரண்டாம் பாகம்)

போன பாடத்திலே நாற்று நடுதல் வரை படித்தோம். இதில் அதன்மேலுள்ள பாகத்தைப் படிப்போம்.

6. சூம்பிய தாளினைப் பார்—முற்றிமுற்றித்
துள்ளி யெழும்பு தம்மா
பாம்புசூல் கொண்டது போல்—அதனுடல்
பருத்துத் தோன்று தம்மா.

7. மடல் விரிவது போல்—தலைகள்
மலர்ந்து விரியு தம்மா
குடலை கக்கு தம்மா—நிமிர்ந்து
குலுங்கிச் சிரிக்கு தம்மா.

8. காய்த்து மணிக ளெல்லாம்—பால்முற்றிக்
கதிரெனச் சாய்ந்த தம்மா
வாய்த்து வெளுத்த தம்மா—சரிந்து
வளத்திற் படுத்த தம்மா.

9. கூனரி வாளெடுப் போம்—குனிந்து
குனிந்தரிந் தேகுவிப் போம்
வானுறப் போர்தொடுப் போம்—பிரித்து
மலரப் பரப்பிடு வோம்.

10. நற்பொலி நாயக ரைப்—பிணைத்து
நடத்தி யுழக்கிடு வோம்
நெற்பொலி சேர்த்திடு வோம்—வைக்கோலை
நிலத்திற் குவித்திடு வோம்.

— முதுதமிழ்ப்புலவர், மு. நல்லதம்பி

மொழிப் பயிற்சி

1. அருவி வெட்டுவது எப்படி ?

----

3. சூடு மிதிப்பது எப்படி ?

----

3. "பொலிநாயகன்" என்று சொல்வது எதை ?

----

12. உணவு

நெல் எண்ணெய் அரிசி சமைத்து
குரக்கன் சத்து பச்சை வகைகள்

மேலே காட்டிய சொற்களைக் கீறிட்ட இடங்களில் வைத்து நிரப்புக:

1. நம்முடைய நாட்டுக்கு ______________ சிறந்த உணவு.

2. நெல்லைக் குற்றி ______________ பெறுகிறோம்.

3. சோறு ______________ உண்ணுகிறோம்.

4. நெல்லிலே பல ______________ உண்டு.

5. எள் நமக்கு ______________ தரும்.

6. பாசிப்பயறு ______________ நிறம் கொண்டது.

7. கேழ்வரகை நாம் ______________ என்று சொல்லுகிறோம்.

8. கோதுமையிலே ______________ மிகுதி.

மொழிப் பயிற்சி

1. நான்கு தானியங்களின் பெயர்கள் எழுதுக:

....

....

2. நீரிருக்கும் இடத்துக்குக் கிட்டவுள்ள சந்தையில் விலைப்படும் ஐந்து காய்கள் சொல்லுக:

....

....

3. நீர் விரும்பும் ஐந்து பழங்களின் பெயர் எழுதுக:

....

....

4. நீர் உண்ணும் மூன்று பலகாரங்கள் கூறுக:

....

....

5. கரும்பிலிருந்து என்ன பெறுகிறோம்? எப்படிப் பெறுகிறோம்?

....

....

....

6. தயிர் எப்படி உண்டாகிறது?

....

....

....

13. பெயரும் வினையும் I

தொழில் வினையென்றுஞ் சொல்லப்படும். கீழே சில தொழிலாளர் பெயர்களும் வினைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அவரவர்க்கேற்ற தொழில்களை, ஒன்றும் இலக்கத்திற் காட்டியபடி பொருத்தமாக எழுதுக.

பாடகன்	மாலுமி	சேணியன்	குயவன்
உழவன்	மாணவன்	வண்ணான்	தச்சன்
கப்பல்	பாட்டு	பாடம்	புடவை
வயல்	துணி	பானை	வீடு

ஓட்டுகிறான்	நெய்கிறான்	படிக்கிறான்	கட்டுகிறான்
உழுகிறான்	பாடுகிறான்	வெளுக்கிறான்	வனைகிறான்

1. பாடகன் பாட்டுப் பாடுகிறான்.

2. ....

3. ....

4. ....

5. ....

6. ....

7. ....

8. ....

14. பெயரும் வினையும் II

1. யானை குதிரை சிங்கம் காகம்
கோழி நாய் பன்றி பாம்பு

2. கனைக்கும் உறுமும் கரையும் குரைக்கும்
முழங்கும் பிளிறும் கூவும் சீறும்

அந்தந்தப் பெயருக்கேற்ற வினையை 1 – ம் இலக்கத்திற் காட்டியபடி அமைத்தெழுதுக:

1. கோழி கூவும்.

2. ....

3. ....

4. ....

5. ....

6. ....

7. ....

8. ....

15. பெயரும் வினையும் III

பொருத்தமான சொற்களால் நிரப்புக:

1. தங்கம்மாள் ____________________ குற்றுகிறாள்.
2. நல்லம்மா ____________________ இடிக்கிறாள்.
3. தங்கை ____________________ தீட்டுகிறாள்.
4. செல்வி ____________________ கொழிக்கிறாள்.
5. புனிதவதி ____________________ அரைக்கிறாள்.
6. பொன்னம்மா ____________________ புடைக்கிறாள்.
7. நாகன் ____________________ கொத்துகிறான்.
8. வெள்ளையன் ____________________ அரிகிறான்.
9. பொன்னன் ____________________ அறுக்கிறான்.
10. கறுப்பன் ____________________ வெட்டுகிறான்.

16. பெயரும் வினையும் IV

வினைச் சொற்கள் மாறிப்போயிருக்கின்றன. சரியான சொற்களைத் தெரிந்து எழுதுக:

1. கோழி முட்டை தத்துகிறது ( ).

2. எலி வளையில் பறக்கிறது ( ).

3. தண்ணீரில் வாத்து இடுகிறது ( ).

4. பருந்து வானத்தில் நுழைகிறது ( ).

5. குரங்கு மரங்களில் ஊளையிடுகிறது ( ).

6. காட்டில் நரி நீந்துகிறது ( ).

7. பசு கன்றை பாய்கிறது ( ).

8. தவளை நிலத்தில் அழைக்கிறது ( ).

17. பெயரும் வினையும் V

சரியான சொற்களைத் தெரிந்து எழுதுக:

1. பாம்பு (குட்டி போடும், குஞ்சு பொரிக்கும், முட்டையிடும்.)

2. கப்பல் (வானத்தில், தண்ணீரில், நிலத்தில்) மிதக்கும்.

3. புலி தன் (அலகால், மூக்கால், வாயால்) கடிக்கும்.

4. கோழிமுட்டை (வெள்ளை, சிவப்பு, கறுப்பு, பச்சை) நிறம்.

5. மோட்டார் வண்டி (மெள்ள, விசையாய், தலை கீழாய்) ஓடும்.

6. பாம்பு (நடந்து, பறந்து, ஊர்ந்து) செல்லும்.

7. பூ (காய்க்கும், பூக்கும், பழுக்கும்)

8. கரும்பு (புளிக்கும், கசக்கும், இனிக்கும், உறைக்கும்).

9. காகம் (கூவும், அலறும், கீச்சிடும், கரையும்).

10. புலி (குரைக்கும், கத்தும், கனைக்கும், உறுமும்).

2ஂ4ஂ3ஂ

18. பெயரும் வினையும் VI

பின்வரும் தொடர்களிலுள்ள பெயர் வினைகளைப் பிரித்தெழுதுக:

பசு வீட்டில் வளரும். பசு புல்லைத் தின்னும். பசு பால் தரும். பசு மனிதருக்கு அடங்கி நடக்கும். பசு தன் கன்றை நக்கும். பசுவின் கன்று துள்ளி விளையாடும். மனிதர் பசுவின் பாலைக் குடிப்பார்கள். பாலில் இருந்து தயிர் கிடைக்கிறது. நாம் தயிரிலிருந்து வெண்ணெயும் மோரும் பெறுகிறோம். பெண்கள் வெண்ணெயைக் காய்ச்சி நெய் பெறுகிறார்கள்.



	பெயர்		வினை
1.	பசு	1.	வளரும்
2.		2.	
3.		3.	
4.		4.	
5.		5.	
6.		6.	
7.		7.	
8.		8.	
9.		9.	
10.		10.	

மொழிப் பயிற்சி

1. புல்லுத் தின்னும் மூன்று விலங்குகளின் பெயர் எழுதுக:

....

2. இறைச்சி தின்னும் மூன்று விலங்குகளின் பெயர் எழுதுக:

....

3. குட்டிபோடும் நான்கு விலங்குகள் எழுதுக:

....

4. முட்டையிடும் நான்கு பறவைகள் எழுதுக:

....

5. வெளவால் குட்டிபோடுமா? முட்டை யிடுமா?

....

6. எலி குட்டிபோடுமா? முட்டை யிடுமா?

....

7. பாம்பு குட்டிபோடுமா? முட்டை யிடுமா?

....

8. வாத்து எப்படிக் குஞ்சு பொரிக்கும்?

....

....



19. படப் பயிற்சி

1. இந்தப் படத்தில் என்ன காண்கின்றீர்?

2. மரத்தின் அடியில் இருப்பவன் யார்?

3. அவன் எதற்காக அங்கே இருக்கிறான்?

4. அவன் கையில் இருப்பது என்ன?

5. அவன் ஏன் அதை வைத்திருக்கிறான்?

6. அவன் பக்கத்திலே குந்தியிருப்பது என்ன?

7. அதனால் அவனுக்கு என்ன நன்மையுண்டு?

8. மாடுகள் என்ன செய்கின்றன?

20. மேய்ப்பன்

1. அன்பு கனிந்த மேய்ப்பன் — வெள்ளை
அகம் பொருந்திய மேய்ப்பன்
இன்பு மலிந்த மேய்ப்பன் — ஆவை
இனிது கண்ணெனப் பார்ப்பன்.

2. பொழுதுதோன்றுமுன் னெழுவான் — கண்ணன்
பொலிந்த பாதங்கள் தொழுவான்
தொழுது கோலொன்று கொள்வான் — தெருத்
தோறும் வீடுகள் செல்வான்.

3. புல்லாங் குழலை யெடுப்பான் — வாயிற்
பொருத்தி விரல்கள் பிடிப்பான்
நல்லா யிசையை வளர்ப்பான் — தூய
நாத மெழுப்பி யழைப்பான்.

4. குழ லிசைப்பது கேட்கும் — வாலைக்
குழைத்து விரைந்து நோக்கும்
தொழுவிற் கட்டினை யவிழ்ப்பார் — நல்ல
துணைவ னிடத்தில் விடுப்பார்.

5. புல்லு நிலத்திற் சேர்ப்பான் — பகற்
பொழுது முழுதும் மேய்ப்பான்
மெல்ல மாலை யுறவே — சாய்ப்பான்
வீட்டை நோக்கி வரவே.

omit

6. அம்மா என்று கரைந்தே — அவை
அருமைக் கன்றை நினைந்தே
சும்மா பாலைச் சொரிந்தே — வீடு
தொடர்ந்து நாடும் விரைந்தே.

— மூதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி

1. அன்பு கனிந்த மேய்ப்பன் என்பதன் கருத்து என்ன ?

---

2. மேய்ப்பன் காலையிலே ஏன் வீடுகளுக்குப் போகிறான் ?

---

3. புல்லாங்குழல் என்பதென்ன ?

---

4. குழலோசையைக் கேட்ட பசுக்கள் என்ன செய்யும் ?

---

5. மாலையிலே பசுக்கள் வீடு திரும்புகையில் ஏன் அம்மா என்று கதறும் ?

---

21. பெயர்கள் : ஒருமை பன்மை

ஒருவரை அல்லது ஒரு பொருளைக் குறிப்பன ஒருமை.

பலரை அல்லது பல பொருள்களைக் குறிப்பன பன்மை.

மரம் – ஒருமை ;	மரங்கள் - பன்மை ;
குரங்கு – ஒருமை ;	குரங்குகள் – பன்மை ;
மனிதன் – ஒருமை ;	மனிதர் – பன்மை.

கீழேயுள்ள பெயர்களில் ஒருமை எவை? பன்மை எவை?

பல்லி	கிணறு	கீரி	பறவைகள்
பூக்கள்	மக்கள்	நாங்கள்	கிளி
புத்தகங்கள்	மனிதர்	பெண்	குதிரைகள்
விளக்கு	அட்டை	பையன்	வீடுகள்

	ஒருமை		பன்மை
1	பல்லி	1	பூக்கள்
2		2	
3		3	
4		4	
5		5	
6		6	
7		7	
8		8	

22. வினைகள் : ஒருமை பன்மை

கீழேயுள்ளன வினைச்சொற்கள். இவற்றுள் ஒருமை எவை? பன்மை எவை?

ஓடினேன்	இருங்கள்	போனீர்கள்
குளிக்கிருர்கள்	பாய்ந்தது	நீந்துகிருேம்
படித்தான்	ஆடுகின்றன	அரிகிருள்
பாடுவாள்	குடிக்கிருய்	நடந்தான்
கூவுகிறது	அழுதாள்	உறங்குகிறது

	ஒருமை		பன்மை
1.	ஓடினேன்	1.	குளிக்கிருர்கள்

23. ஒருமை பன்மை

பிழை திருத்தல்

பின்வரும் தொடர்கள் பிழையுடையன. அவற்றிலுள்ள பெயர்களைத் திருத்துக:

1.	மாடு மேய்கின்றன.	1.	....
2.	பூக்கள் விரிகிறது.	2.	....
3	நீங்கள் பாடுகிறாய்.	3.	....
4.	அவன் ஓடுகிறார்கள்.	4.	....
5.	நாங்கள் வந்தேன்.	5.	....

பின்வரும் தொடர்கள் பிழையுடையன. அவற்றிலுள்ள வினைகளைத் திருத்துக:

	பிழை		திருத்தம்
1.	குரங்கு பாய்ந்தன.	1.	....
2.	கன்றுகள் பால்குடிக்கிறது.	2.	....
3.	கீரிகள் ஓடுகிறது.	3.	....
4	நான் குளிக்கிறோம்.	4.	....
5.	நாங்கள் விளையாடுவேன்.	5.	....



24. கடமைகள் I

1. சோலையிற் பறவைகள்பார் — செல்வமணியே!
தூயகுரல் காட்டுதல்பார் — செல்வமணியே!
காலையில் விழித்திடுவாய் — செல்வமணியே!
கடன்கள் கழித்திடுவாய் — செல்வமணியே!

2. நாடிக் குளித்திடுவாய் — செல்வமணியே!
நல்லுடை தரித்திடுவாய் — செல்வமணியே!
தேடிக் கடவுளடி — செல்வமணியே!
சிந்தையி லிருத்திடுவாய் — செல்வமணியே!

3. பள்ளிக்கூடம் சென்றிடுவாய் — செல்வமணியே!
பாடல்பல பாடிடுவாய் — செல்வமணியே!
துள்ளித் துள்ளி யாடிடுவாய் — செல்வமணியே!
சோம்பலின்றிக் கற்றிடுவாய் — செல்வமணியே!

4. சின்னச்சின்னப் பாலரோடு—செல்வமணியே!
சிரித்துக் கதைகள்சொல்லு—செல்வமணியே!
வன்னவன்னப்பூக்கள்கொய்வாய்-செல்வமணியே!
மாலைகள் தொடுத்தணிவாய்—செல்வமணியே!

5. பச்சைப் பயிர்தழைக்கச்—செல்வமணியே!
பழந்தருங் கன்றுயரச்—செல்வமணியே!
மெச்சிடவே பட்டைகொண்டு—செல்வமணியே!
மெல்லமெல்ல நீர்விடுவாய்—செல்வமணியே!

— முதுதமிழ்ப்புலவர், மு. நல்லதம்பி

1 அதிகாலையிலே ஒலி பெருக்கும் நான்கு பறவைகளின் பெயர் எழுதுக

....

2. காலைக் கடன்கள் சில எழுதுக.

....

3. ஏன் நாம் குளிக்கவேண்டும்?

....

4. நல்லுடை தரிப்பதென்பது என்ன?

....

5. ஏன் நாம் படிக்கவேண்டும்?

....

6. நாம் பயிர்செய்யப் பழகுவதால் என்ன பயன்?

....

25. ஆப்பைக்கழற்றிய குரங்கு



மேலே காட்டப்பட்ட படத்தைப் பார்த்துக் கதையைச் சொல்லுக.

26. திருத்தல்

திருத்தி எழுதுக:

1. எங்கடை அண்ணை நேத்து வந்தார்.

   ....

2. தேப்பனோடை மேன் பள்ளிக்குப் போனான்.

   ....

3. வெய்யிலிலை நிண்டால் கண் சுவக்கும்.

   ....

4. சிவரிலை பல்லி இருக்குது.

   ....

5. எப்ப எங்கடை பஞ்சம் தீரும்?

   ....

6. ஆத்திலை குளிச்சால் குளுமையாய் இருக்கும்.

   ....

7. அவை சோறு சமைச்சுத் தின்னினம்.

   ....

27. கடமைகள் II

6. வேலையில்லையென் றுசும்மா—செல்வமணியே!
வீண்பொழுது போக்கிடாமல்—செல்வமணியே!
ஏலவேசிர்க் கைத்தொழில்கள்—செல்வமணியே!
இயைந்துநீ கற்றுக்கொள்வாய்—செல்வமணியே!

7. மெல்லிய விரல்களினுல்—செல்வமணியே!
வெள்ளைநூலை நூற்றுக்கொள்வாய்—செல்வமணியே!
அல்லலின்றித் துணிநெய்யச்—செல்வமணியே!
ஆசையொடு நீபழகு—செல்வமணியே!

8. ஆரையும் அடித்திடாதே—செல்வமணியே!
ஆரையும்நீ ஏசிடாதே—செல்வமணியே!
பாரிலெவ் வுயிர்களையும்—செல்வமணியே!
பகைத்துக் கெடுத்திடாதே—செல்வமணியே!

9. ஆசிரிய ரெங்களுக்குச்—செல்வமணியே!
அன்புடைய நண்பரறி—செல்வமணியே!
கூசவேண்டா அஞ்சவேண்டா—செல்வமணியே!
குழந்தையென் றுசோரவேண்டா-செல்வமணியே!

10. உன்னைப்போலே நல்லபிள்ளை—செல்வமணியே!
ஒருவரு மில்லையறி—செல்வமணியே!
பொன்னைப்போலே பூவைப்போலே—செல்வமணியே!
பூமியிலே நீசிறந்தாய்—செல்வமணியே!

மொழிப் பயிற்சி

1. சிறந்த கைத்தொழில்கள் நான்கு எழுதுக:

....

....

2. எவ்வாறு நூல் நூற்பது?

....

....

3. நாமே துணி நெய்யப் பழகுவதால் என்ன பயன்?

....

....

4. உயிர்களைத் துன்புறுத்துவது ஏன் கூடாது?

....

....

5. ஆசிரியர் எங்களுக்கு எப்படிப்பட்டவர்?

....

28. எதிர்ச் சொற்கள்

ஒன்ரும் பிரிவிலே காணப்படுஞ் சொற்களுக்கு எதிரான சொற்கள், இரண்டாம் பிரிவிலே முறை மாறிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைத் தெரிந்து நேர் நேராக எழுதுக:

1.	வா	உள்ளே	நன்மை	செல்வம்
	மூடு	உண்டு	இன்பம்	வரவு
	காலை	ஏறு	தண்ணீர்	இரு
	நினை	மேலே	முன்	இலாபம்
2.	நஷ்டம்	கீழே	போ	இறங்கு
	செலவு	இல்லை	வறுமை	தீமை
	திற	மற	மாலை	வெந்நீர்
	துன்பம்	பின்	வெளியே	எழும்பு

1. வா — போ
2.
3.
4.
5.
6.
7.
8.
9.
10.
11.
12.
13.
14.
15.
16.

29. இரு தொடர்கள்

கீழே இரு தொடரா யிருப்பவைகளை ஒரு தொடராக்கி எழுதுக :

உதாரணம் :

நான் ஒரு பூனையைக் கண்டேன் ; அந்தப் பூனை வெள்ளை நிறமுடையது.

நான் ஒரு வெள்ளைப் பூனையைக் கண்டேன்.

1. கந்தன் பள்ளிக்குப் போனான் ; கந்தன் பாடம் படித்தான்.

   ----

2. நான் நேற்றுப் போனேன் ; நான் நேற்று அவனைக் கண்டேன்.

   ----

3. குரங்கு மரங்களிலே தொங்கும் ; குரங்கு தலைகீழாய்த் தொங்கும்.

   ----

4. நல்லம்மா தண்ணீருக்குப் போனாள் ; நல்லம்மா குடங் கொண்டு போனாள்.

   ----

5. நீர் காலம்பெற எழும்ப வேண்டும் ; நீர் காலம்பெறப் படிக்க வேண்டும்.

   ----

6. நல்ல பிள்ளை பராக்குப் பார்க்கமாட்டான் ; நல்ல பிள்ளை பாடம் படிப்பான்.

   ----

30. தொடர்மொழி

பின் காட்டும் சொற்களைச் சேர்த்தெழுதுக :

1.	கடல்	+	ஓரம்	=
2.	கல்	+	உரல்	=
3.	நாய்	+	எலும்பு	=
4.	மா	+	பழம்	=
5.	பலா	+	பழம்	=
6.	கத்தி	+	பிடி	=
7.	சிறு	+	எறும்பு	=
8.	ஆடு	+	குட்டி	=
9.	புளி	+	காய்	=
10.	மண்	+	கட்டி	=

MOLIP PAYIRCHI

BOOK I

Printed at
The Thirumakal Press,
Chunnakam

North-Ceylon Tamil Works Publishing House
CHUNNAKAM :: *Price: 60 cts.*